# நான் யார்?

( ஸ்ரீரமணபகவானருண்மொழி )

அன்பளிப்பு
R.G. துரைப்பாண்டி B
கோச்சடை, மது

ஸ்ரீரமணாச்ரமம்,
திருவண்ணாமலை.

# நான் யார்

வினாவிடை ரூபமாய்த் தொகுக்கப்பெற்ற
ஸ்ரீரமணபகவா னருண்மொழி

இது

*திருவண்ணாமலை, ஸ்ரீ ரமணாச்ரமம் ஸர்வாதிகாரி,*

நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகளால்

பிரசுரிக்கப்பெற்றது.

*All Rights reserved by the Publisher*

1946

விலை அணா இரண்டு.


பதினொன்றும் பதிப்பு
3000 பிரதிகள்

# முன்னுரை

பூமியின் ஹ்ருதயமும் நினைக்க முக்திதரவல்லதுமான ஸ்ரீ அருணாசலத்தில் விரூபாக்ஷ குகையில் பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளது அருந்தவ மோனத்தால் அவர்பால் இழுக்கப்பட்ட பக்தர்கள் பலருள் ஒருவரான சிவப்பிரகாசம் பிள்ளை என்னுமன்பர் 1901, 1902-ல் மஹர்ஷிகளை அணுகி உண்மையை உணர்ந்தபடி தமக்குபதேசிக்கும்படி வினயத்துடன் வேண்டிக் கேட்ட வினாக்கட்கு மஹர்ஷிகள் அவ்வப்போது தமிழில் விடை எழுதித் தந்த இது, வினா விடைரூபமாக முன் பத்துமுறை பதிப்பிக்கப்பெற்று பிரதிகள் முற்றும் செலவாகிப் பலரும் விரும்புவதால் இப்பதிப்பு வெளியிடப்பட்டது.

நிரஞ்ஜனானந்தசுவாமி.

Printed by Chhaganlal Yogi at ARUNA PRESS, Bangalore City.



**பகவான் ஸ்ரீரமணமஹர்ஷிகள்**

*(ஆத்மவிசாரத்தை உபதேசிக்கும் இந்நூல் அருளிய 21-வது வயதில்)*

ஓம்நமோபகவதேஸ்ரீரமணாய

# நான் யார்

ஸகல ஜீவர்களும் துக்கமென்பதின்றி எப்போதும் சுகமாயிருக்க விரும்புவதாலும், யாவர்க்கும் தன்னிடத்திலேயே பரமப்பிரிய மிருப்பதாலும், பிரியத்திற்கு சுகமே காரண மாதலாலும், மனமற்ற நித்திரையில் தினமனுபவிக்கும் தன் சுபாவமான அச்சுகத்தையடையத் தன்னைத்தா னறிதல்வேண்டும். அதற்கு நான் யார் என்னும் விசாரமே முக்கிய சாதனம்.

1. நான் யார்?

ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூலதேகம் நானன்று. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தமென்னும் பஞ்ச விஷயங்களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, கிராணமென்கிற ஞானேந்திரியங்களைந்தும் நானன்று. வசனம், கமனம், தானம், மலவிஸர்ஜ்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்களைந்தும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்ச வாயுக்களும் நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களுமற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று.

2. இவையெல்லாம் நானல்லாவிடில் பின்னர் நான் யார்?

*மேற்சொல்லிய யாவும் நானல்ல வென்று 'நேதி' செய்து தனித்து நிற்கும் அறிவே நான்.*

3. அறிவின் சொரூப மென்ன?

*அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.*

4. சொரூபதரிசனம் எப்போது கிடைக்கும்?

*திருசியமாகிய ஜகம் நீங்கியவிடத்துத் திருக்காகிய சொரூபதரிசன முண்டாகும்.*

5. ஜகமுள்ள ( தோன்றுகின்ற ) போதே சொரூபதரிசன முண்டாகாதா?

*உண்டாகாது.*

6. ஏன்?

*திருக்கும் திருசியமும், ரஜ்ஜுவும் சர்ப்பமும் போன்றவை. கற்பித சர்ப்பஞானம் போனாலொழிய அதிஷ்டான ரஜ்ஜுஞானம் உண்டாகாதது போல கற்பிதமான ஜகதிருஷ்டி நீங்கினாலொழிய அதிஷ்டான சொரூப தரிசன முண்டாகாது.*

7. திருசியமாகிய ஜகம் எப்போது நீங்கும்?

*சர்வ அறிவிற்கும் சர்வ தொழிற்கும் காரணமாகிய மனம் அடங்கினால் ஜகம் மறையும்.*

8. மனதின் சொரூபமென்ன?

*மனம் என்பது ஆத்மசொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கின்றது. நினைவுகளை யெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது தனியாய் மனமென்றோர் பொருளில்லை; ஆகையால் நினைவே மனதின் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து*

ஜகமென்ருேர் பொருள் அன்னியமா யில்லை. தூக்கத்தில் நினைவுகளில்லை, ஜகமுமில்லை. ஜாக்ர சொப்பனங்களில் நினைவுகளுள ; ஜகமும் உண்டு. சிலந்திப் பூச்சி எப்படித் தன்னிடமிருந்து வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக்கொள்ளுகிறதோ, அப்படியே மனமும் தன்னிடத்திலிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக் கொள்ளுகிறது. மனம் ஆத்ம சொரூபத்தினின்று வெளிப்படும் போது ஜகம் தோன்றும். ஆகையால், ஜகம் தோன்றும் போது சொரூபம் தோன்ருது ; சொரூபம் தோன்றும் (பிரகாசிக்கும்) போது ஜகம் தோன்ருது. மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனல், மனம் தானய் முடியும். தான் என்பது ஆத்மசொரூபமே. மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தை அனுசரித்தே நிற்கும் ; தனியாய் நிற்காது. மனமே சூக்ஷ்மசரீரமென்றும் ஜீவனென்றும் சொல்லப்படுகிறது.

9. மனத்தின் சொரூபத்தை விசாரித்தறியும் மார்க்கம் என்ன ?

இந்த தேகத்தில் நான் என்று கிளம்புவ தெதுவோ அதுவே மனமாம். நான் என்கிற நினைவு தேகத்தில் முதலில் எந்தவிடத்திற் ருேன்றுகின்றதென்று விசாரித்தால், ஹ்ருதயத்தி லென்று தெரியவரும். அதுவே மனதின் பிறப்பிடம். நான், நான் என்று கருதிக்கொண்டிருந்தாலுங்கூட அவ்விடத்திற் கொண்டுபோய் விட்டுவிடும். மனதில் தோன்றும் நினைவுகளெல்லாவற்றிற்கும் நான் என்னும் நினைவே முதல் நினைவு. இது எழுந்த பிறகே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பிறகே, முன்னிலை படர்க்கைகள் தோன்றுகின்றன ; தன்மையின்றி முன்னிலை படர்க்கைக ளிரா.

10. மனம் எப்படி யடங்கும்?

நான் யாரென்னும் விசாரணையினாலேயே மனமடங்கும்; நான் யாரென்னும் நினைவு மற்ற நினைவுகளை யெல்லா மழித்துப் பிணஞ்சுடுதடிபோல் முடிவில் தானு மழியும். பிறகு சொரூபதரிசன முண்டாம்.

11. நான் யாரேன்கிற நினைவை சதாகாலமும் பிடிக்கும் உபாயம் என்ன?

பிற வெண்ணங்க ளெழுந்தால் அவற்றைப் பூர்த்தி பண்ணுவதற்கு எத்தனியாமல் அவை யாருக்குண்டாயின என்று விசாரிக்கவேண்டும். எத்தனை எண்ணங்க ளெழினு மென்ன? ஜாக்கிரதையாய் ஒவ்வோரெண்ணமும் கிளம்பும்போதே, இது யாருக்குண்டாயிற்று என்று விசாரித்தால் எனக்கு என்று தோன்றும். நான் யார் என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும். இப்படிப் பழகப் பழக மனதிற்குத் தன் பிறப்பிடத்திற் றங்கி நிற்கும் சக்தி யதிகரிக்கின்றது. சூக்ஷ்மமான மனம், மூளை இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும்போது ஸ்தூலமான நாமரூபங்கள் தோன்றுகின்றன; ஹ்ருதயத்தில் தங்கும்போது நாமரூபங்கள் மறைகின்றன. மனத்தை வெளிவிடாமல் ஹ்ருதயத்தில் வைத்துக்கொண் டிருப்பதற்குத்தான் அகமுகம் அல்லது அந்தர்முகம் என்று பெயர். ஹ்ருதயத்திலிருந்து வெளி விடுவதற்குத் தான் பகிர்முக மென்று பெயர். இவ்விதமாக மனம் ஹ்ருதயத்திற் றங்கவே, எல்லா நினைவுகளுக்கும் மூலமான நான் என்பது போய் எப்பொழுதுமுள்ள தான் மாத்திரம் விளங்கும். எதைச் செய்தாலும் நான் என்கிற அகங்காரமற்றுச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் எல்லாம் சிவஸ்வரூபமாய்த் தோன்றும்.

12. மனமடங்குவதற்கு வேறு உபாயங்க ளில்லையா?

விசாரணையைத் தவிர வேறு தகுந்த உபாயங்க ளில்லை. மற்ற உபாயங்களினால் அடக்கினால் மன மடங்கினாற்போலிருந்து மறுபடியும் கிளம்பிவிடும். பிராணாயாமத்தாலும் மன மடங்கும்; ஆனால் பிராண னடங்கியிருக்கும் வரையில் மனமு மடங்கியிருந்து, பிராணன் வெளிப்படும்போது தானும் வெளிப்பட்டு வாசனை வயத்தா யலையும். மனதிற்கும் பிராணனுக்கும் பிறப்பிட மொன்றே. நினைவே மனதின் சொரூபம். நான் என்னும் நினைவே மனதின் முதல் நினைவு; அதுவே யகங்காரம். அகங்கார மெங்கிருந்து உற்பத்தியோ, அங்கிருந்துதான் மூச்சும் கிளம்புகின்றது; ஆகையால் மனமடங்கும்போது பிராணனும், பிராணனடங்கும்போது மனமுமடங்கும். ஆனால் சுழுத்தியில் மன மடங்கியிருந்தபோதிலும் பிராண னடங்கவில்லை. தேகத்தின் பாதுகாப்பின் நிமித்தமும், தேகமானது மரித்துவிட்டதோவென்று பிறர் ஐயுறுவண்ணமும் இவ்வாறு ஈச்வர நியதியால் ஏற்பட்டிருக்கிறது. ஜாக்கிரத்திலும் சமாதியிலும் மனமடங்குகிற போது பிராணனடங்குகிறது. பிராணன் மனதின் ஸ்தூலரூப மெனப்படும். மரண காலம் வரையில் மனம் பிராணனை உடலில் வைத்துக்கொண்டிருந்து உடல் மரிக்குங் காலத்தில் அதனைக் கவர்ந்து கொண்டு போகின்றது. ஆகையால் பிராணாயாமம் மனத்தை யடக்க சகாய மாகுமே யன்றி மனோநாசஞ் செய்யாது.

பிராணாயாமம் போலவே மூர்த்தித்தியானம், மந்திர ஜபம், ஆகாரநியம மென்பவைகளும் மனத்தை யடக்கும் சகாயங்களே.

மூர்த்தித் தியானத்தாலும் மந்திர ஜபத்தாலும் மனம் ஏகாக்கிரத்தை யடைகிறது. மனமானது சதா சலித்துக்கொண்டே யிருக்கும். யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் அது எப்படி வேறொன்றையும் பற்றுமலதையே பற்றிக் கொண்டு செல்லுமோ, அப்படியே மனதையும் ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்திற் பழக்கினால் அதையே பற்றிக்கொண்டிருக்கும். மனம் அளவிறந்த நினைவுகளாய் விரிகின்றபடியால் ஒவ்வொரு நினைவும் அதிபலவீனமாகப் போகின்றது. நினைவுக ளடங்கவடங்க ஏகாக்கிரத்தன்மை யடைந்து, அதனாற் பலத்தை யடைந்த மனத்திற்கு ஆத்மவிசாரம் சுலபமாய் சித்திக்கும். எல்லா நியமங்களினுஞ் சிறந்த மித ஸாத்விக ஆகாரநியமத்தால் மனத்தின் ஸத்வகுணம் விருத்தியாகி ஆத்மவிசாரத்திற்கு சகாய முண்டாகிறது.

**13.** விஷயவாசனை (நினைவு) கள் அளவற்றனவாய்க் கடலில் அலைபோலத் தோன்றுகின்றனவே; அவைகளெல்லாம் எப்போது நீங்கும்?

சொரூபத்தியானம் கிளம்பக் கிளம்ப நினைவுகளெல்லா மழிந்துவிடும்.

**14.** தோன்றுதோட்டு வருகின்ற ஸகல விஷயவாசனைகளும் ஒடுங்கி சொரூபமாத்திரமாய் இருக்கமுடியுமா?

முடியுமா முடியாதா வென்கிற சந்தேக நினைவுக்கிடங்கொடாமல், சொரூபத் தியானத்தை விடாப்பிடியாய்ப் பிடிக்கவேண்டும். ஒருவன் எவ்வளவு பாபியாயிருந்தாலும், 'நான் பாபியாயிருக்கிறேனே! எப்படிக் கடைத்தேறப் போகிறேன்' என் றேங்கி அழுதுகொண்

டிராமல், தான் பாபி என்னு மெண்ணத்தையு மறவே யொழித்து சொரூபத்தியானத்தி லூக்க முள்ளவனுக விருந்தால் அவன் நிச்சயமா யுருப்படுவன். நல்லமன மென்றும் கெட்டமன மென்று மிரண்டு மனங்க ளில்லை ; மனமொன்றே. வாசனைகளே சுப மென்றும் அசுப மென்று மிரண்டுவிதம். மனம் சுபவாசனை வயத்தாய் நிற்கும்போது நல்லமன மென்றும், அசுபவாசனை வயத்தாய் நிற்கும்போது கெட்டமன மென்றும் சொல்லப் படும்.

பிரபஞ்ச விஷயங்களிலும் பிறர் காரியங்களிலும் மனதை விடக்கூடாது. பிறர் எவ்வளவு கெட்டவர்களா யிருந்தாலும், அவர்களிடத்தில் துவேஷம் வைக்கலா காது. விருப்பு, வெறுப்பு இரண்டும் வெறுக்கத்தக்கன. பிறருக் கொருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத் துக்கொள்ளுகிறுன். இவ்வுண்மையை அறிந்தால் எவன் தான் கொடா தொழிவான் ? தானெழுந்தால் சகலமும் எழும் : தானடங்கிஞல் சகலமு மடங்கும். எவ்வளவுக் கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறேமோ, அவ்வளவுக்கவ் வளவு நன்மை யுண்டு. மனத்தை யடக்கிக் கொண் டிருந்தால் எங்கேயிருந்தாலு மிருக்கலாம்.

## 15. விசாரணை எதுவரையில் வேண்டும் ?

மனத்தின்கண் எதுவரையில் விஷயவாசனைகளிருக் கின்றனவோ, அதுவரையில் நான் யார் என்னும் விசார ணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத்தோன்ற அப் போதப்போதே அவற்றையெல்லாம் உற்பத்திஸ்தானத் திலேயே விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். ஒருவன் சொரூபத்தை யடையும் வரையில் நிரந்தர சொரூப ஸ்ம ரணையைக் கைப்பற்றுவாருயின், அது வொன்றே

போதும். கோட்டைக்குள் எதிரிகளுள்ளவரையில் அதிலிருந்து வெளியே வந்துகொண் டிருப்பார்கள்; வர வர அவர்களை யெல்லாம் வெட்டிக்கொண்டே யிருந்தால் கோட்டை கைவசப்படும்.

16. சொரூபத்தின் இயல்பு என்ன?

யதார்த்தமா யுள்ளது ஆத்மசொரூப மொன்றே. ஜக, ஜீவ, ஈச்வரர்கள் சிப்பியில் வெள்ளிபோல் அதிற் கற்பனைகள்; இவை மூன்றும் ஏககாலத்திற்றோன்றி, ஏககாலத்தில் மறைகின்றன.

நான் என்கிற நினைவு கிஞ்சித்தும் இல்லாத விடமே சொரூபமாகும். அதுவே மௌனமெனப்படும். சொரூபமே ஜகம்; சொரூபமே நான்; சொரூபமே ஈச்வரன்; எல்லாம் சிவ சொரூபமே.

17. எல்லாம் ஈசன் செயலன்றோ?

இச்சா ஸங்கல்ப யத்நமின்றி யெழுந்த ஆதித்தன் சன்னிதி மாத்திரத்தில் காந்தக்கல் அக்கினியைக் கக்குவதும், தாமரை யலர்வதும், நீர் வற்றுவதும், உலகோர் தத்தங் காரியங்களிற் பிரவிருத்தித்து இயற்றி யடங்குவதும், காந்தத்தின் முன் ஊசி சேஷ்டிப்பதும்போல, ஈசன் சன்னிதான விசேஷ மாத்திரத்தால் நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்சகிருத்தியங்கட் குட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரம் சேஷ்டித் தடங்குகின்றனர். அன்றி, அவர் ஸங்கல்ப ஸஹிதரல்லர்; ஒரு கருமமும் அவரை யொட்டாது. அது, லோக கர்மங்கள் சூரியனை யொட்டாததும், ஏனைய சதுர் பூதங்களின் குணகுணங்கள் வியாபகமான ஆகாயத்தை யொட்டாததும்போலும்.

18. பக்தருள் மேலான பக்தன் யார்?

எவன் தன்னையே கடவுளாகிய சொரூபத்தினிடத்தில் தியாகம் செய்கிறானோ அவனே சிறந்த பக்திமான். ஆத்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்று மிடங்கொடாமல் ஆத்ம நிஷ்டாபரனா யிருப்பதே தன்னை ஈசனுக் களிப்பதாம்.

ஈசன்பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக்கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக்கொண்டிருக்கிறபடியால், நாமு மதற் கடங்கியிராமல், இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டுமென்று ஸதா சிந்திப்பதேன்? புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக்கொண்டு போவது தெரிந்திருந்தும், அதிலேறிக் கொண்டுபோகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதிற் போட்டுவிட்டு சுகமாயிராமல், அதை நமது தலையிற் றாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்?

19. வைராக்கியமாவது எது?

எவ்வெவ் நினைவுகள் உற்பத்தியாகின்றனவோ அவற்றை யெல்லாம் ஒன்றுகூட விடாமல் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசுக்கிப் போடுவதே வைராக்கியமாம். முத்துக் குளிப்போர் தம்மிடையிற் கல்லைக் கட்டிக்கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடக்கும் முத்தை எப்படி எடுக்கிறார்களோ, அப்படியே ஒவ்வொருவனும் வைராக்கியத்துடன் தன்னுள்ளாழ்ந்து மூழ்கி ஆத்ம முத்தை யடையலாம்.

20. கடவுளாலும் குருவாலும் ஒரு ஜீவனை முக்தனாக்க முடியாதா?

கடவுளும் குருவும் முக்தியை யடைவதற்கு வழியைக் காட்டுவார்களே யல்லாமல், தாமாகவே ஜீவர்களை முக்தியிற் சேர்க்கார்.

கடவுளும் குருவும் உண்மையில் வேறல்லர். புலி வாயிற் பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே குருவின் அருட்பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப்படுவரேயன்றி ஒருக்காலும் கைவிடப்படார்; எனினும், ஒவ்வொருவரும் தம்முடைய முயற்சியினுலேயே கடவுள் அல்லது குரு காட்டிய வழிப்படி தவருது நடந்து முக்தியடையவேண்டும். தன்னைத் தன்னுடைய ஞானக் கண்ணுல் தானே யறியவேண்டுமே யல்லாமல், பிறரா லெப்படி யறியலாம்? ராமனென்பவன் தன்னை ராமனென் றறிவதற்குக் கண்ணுடி வேண்டுமோ?

21. முக்தியில் விருப்பமுள்ளவனுக்குத் தத்துவங்களின் விசாரணை அவசியமா?

குப்பையைக் கூட்டித் தள்ளவேண்டிய ஒருவன் அதை யாராய்வதா லெப்படிப் பயனில்லையோ, அப்படியே தன்னை யறியவேண்டிய ஒருவன், தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்க ளனைத்தையும் சேர்த்துத் தள்ளிவிடாமல் அவை இத்தனை யென்று கணக்கிடுவதாலும், அவற்றின் குணங்களை யாராய்வதாலும் பயனில்லை. பிரபஞ்சத்தை ஒரு சொப்பனத்தைப்போ லெண்ணிக்கொள்ளவேண்டும்.

22. நனவிற்கும் கனவிற்கும் பேதமில்லையா?

நனவு (ஜாக்ரம்) தீர்க்கம், கனவு (சொப்பனம்) க்ஷணிக மென்பது தவிர வேறு பேதமில்லை. ஜாக்ரத்தில் நடக்கும் விவகாரங்களெல்லாம் எவ்வளவு உண்மையாகத் தோன்றுகின்றனவோ, அவ்வளவு உண்மையாகவே சொப்பனத்தில் நடக்கும் விவகாரங்களும் அக்காலத்திற் றேன்றுகின்றன. சொப்பனத்தில் மனம் வேருெரு தேகத்தை எடுத்துக்கொள்ளுகிறது. ஜாக்ரம் சொப்

பன மிரண்டிலும், நினைவுகளும் நாமரூபங்களும் ஏக காலத்தில் நிகழ்கின்றன.

23. முமுக்ஷுக்களுக்கு நூற்படிப்பால் பிரயோஜன முண்டா?

எந்நூலிலும் முக்தி யடைவதற்கு மனத்தை யடக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளபடியால் மனோநிக்ர கமே நூல்களின் முடிவான கருத்து என்றறிந்துகொண்ட பின்பு நூல்களை யளவின்றிப் படிப்பதாற் பயனில்லை. மனத்தை யடக்கற்குத் தன்னை யாரென்று தன்னுள் விசாரிக்கவேண்டுமே யல்லாமல், எப்படி நூல்களில் விசா ரிப்பது? தன்னைத் தன்னுடைய ஞானக்கண்ணாற் றானே யறியவேண்டும். தான் பஞ்சகோசங்களுக் குள்ளிருப் பது; நூல்களோ அவற்றிற்கு வெளியி லிருப்பவை. ஆகையால் பஞ்சகோசங்களையும் நீக்கி விசாரிக்கவேண் டிய தன்னை நூல்களில் விசாரிப்பது வீணே. கற்றவை யனைத்தையும் ஒரு காலத்தில் மறக்கவேண்டிவரும்.

24. சுகமாவது யாது?

சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே; சுகமும் ஆத்ம சொரூபமும் வேறன்று. பிரபஞ்சப் பொருள் ஒன் றிலாவது சுகமென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக் கின்றோம். மனம் வெளிவரும்போது துக்கத்தை யனு பவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தி யாகும்போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத் திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே யனுபவிக்கிறது. அப் படியே தூக்கம், சமாதி, மூர்ச்சை முதலிய காலங்களி லும், இச்சித்த பொருள் கிடைக்கிறபோதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாகும்போதும், மனம் அந்தர்

முக மாகி ஆத்மசுகத்தையே யனுபவிக்கிறது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும் உள்ளே திரும்புவதுமாக ஓய்வின்றி யலைகிறது. மரத்தடியில் நிழல் சுகமா யிருக்கிறது. வெளியில் சூரிய வெப்பம் கொடுமையா யிருக்கிறது. வெளியி லலையு மொருவன் நிழலிற் சென்று குளிர்ச்சி யடைகிறான். சிறிது நேரத் திற்குப் பின் வெளிக்கிளம்பி வெப்பத்தின் கொடுமைக் காற்றாது, மறுபடியும் மரத்தடிக்கு வருகின்றான். இவ் வாறு நிழலினின்று வெயிலிற் போவதும், வெயிலினின்று நிழலிற் செல்லுவதுமா யிருக்கிறான். இப்படிச் செய்கிற வன் அவிவேகி. ஆனால் விவேகியோ நிழலை விட்டு நீங் கான். அப்படியே ஞானியின் மனமும் பிரம்மத்தை விட்டு நீங்குவதில்லை. ஆனால் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்தி லுழன்று துக்கப்படுவதும், சிறிதுநேரம் பிரம்மத்திற்குத் திரும்பி சுகமடைவதுமா யிருக்கிறது. ஜகமென்பது நினைவே. ஜகம் மறையும்போது, அதா வது நினைவற்றபோது, மனம் ஆனந்தத்தை யனுபவிக் கின்றது; ஜகம் தோன்றும்போது அது துக்கத்தை யனு பவிக்கின்றது.

25. ஞானதிருஷ்டி என்றால் என்ன?

சும்மா விருப்பதற்குத்தான் ஞானதிருஷ்டி என்று பெயர். சும்மா விருப்பதாவது மனதை ஆத்ம சொரூ பத்தில் லயிக்கச் செய்வதே. அன்றி, பிறர் கருத்தறிதல், முக்கால முணர்தல், தூர தேசத்தில் நடப்பனவறிதல் ஆகிய இவை ஞான திருஷ்டி யாகமாட்டா.

26. நிராசைக்கும் ஞானத்திற்கும் சம்பந்த மென்ன?

நிராசையே ஞானம். நிராசை வேறு, ஞானம் வேறன்று; உண்மையில் இரண்டு மொன்றே. நிராசை

யென்பது ஒரு பொருளிலும் மனம் செல்லாமலிருப்பது. ஞான மென்பது ஒரு பொருளும் தோன்றாதிருப்பது. என்றால், அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்கியம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம்.

27. விசாரணைக்கும் தியானத்திற்கும் பேதமென்ன?

விசாரணையாவது தன்னிடத்திலேயே மனதை வைத்துக்கொண்டிருப்பது. தியானமாவது தன்னை பிரம்ம மென்றும் சச்சிதானந்த மென்றும் பாவிப்பது.

28. முக்தி யென்றா லென்ன?

பந்தத்தி லிருக்கும் தான் யாரென்று விசாரித்துத் தன் யதார்த்த சொரூபத்தைத் தெரிந்து கொள்வதே முக்தி.

முற்றிற்று.

ஸ்ரீ ரமணார்ப்பண மஸ்து.

## தனி

தேகங் கடங்கர் சடமிதற் ககமெனுந் திகழ்விலதால்
நாகஞ் சடலமி றுயிலினி றினமுறு நமதியலால்
கோகங் கரனெவ ஞுளனுணர்ந் துளருளக் குகையுள்ளே
சோகம் புரணவ ருணகிரி சிவவிபு சுயமொளிர்வரன்.

(பொழிப்புரை)

தேகம் மட்கலம் போன்ற தோர் ஜடம். இதற்கு நானென்னும் விளக்க மின்மையாலும், உடலற்ற தூக்கத்திலே தினந்தோறும் அனுபவிக்கப்படும் நமது சொரூப வியல்பாலும், இது நானன்று. (எழும்) நானென்போன் எவன் எங்கே யுளனென உணர்ந்து அதுவாயுள்ளவர்தம் இதயகுகையினுள் அருணசல சிவ விபுவாம் அவன் தானே நானெனச் சுடர்வான்.

திருவண்ணாமலை

# ஸ்ரீரமணாச்ரம புஸ்தகாலயம்

**பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகளருளியவை.** ரூ. அ.

ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம் ... 0 3

உபதேசநூன்மாலை (உபதேச வுந்தியார், உள்ளது நாற்பது, அனுபந்தம், அப்பளப்பாட்டு, ஆன்ம வித்தை அடங்கியது) ... 0 3

அநுவாத நூன்மாலை [செய்யுள்] (ஞானசாரவிசார படலம், ஆத்மசாக்ஷாத்காரப் பிரகரணம், பகவத்கீதா சாரம், தக்ஷிணாமூர்த்தி தோத்திரம், குருஸ்துதி, அத்தாமலகம், சேர்ந்தது) ... 0 4

அநுவாதநூன்மாலை [வசனம்] (விவேக சூடாமணி, திருக்கு திருசிய விவேகம், சேர்ந்தது) ... 0 8

அருண்மொழித்தொகுப்பு (நானார், விசாரசங்கிரகம், உபதேசமஞ்சரி, அடங்கியது) ... 0 8

ஸ்ரீ ரமண நூற்றிரட்டு (ஷை எல்லாம் அடங்கியது)... 2 0

உபதேச வுந்தியாரும் கலிவெண்பாவும் ... 0 2

உபதேசஸாரம் (ஸம்ஸ்க்ருத மூலமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்) ... 0 2

ஸ்ரீ மஹர்ஷி வாய்மொழி முதல் பாகம்) ... 0 8

ஷை இரண்டாம் பாகம்) ... 0 6

**மஹர்ஷிகளது பக்தர்கள் செய்தவை.**

ஸ்ரீரமண விஜயம் (ஜீவிய சரித்திரமும் உபதேச மொழிகளும்) மூன்றாம் பதிப்பு ... 2 8

உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்) விரிவுரை ... 1 0

ஸ்ரீ ரமண சரித அகவல் ... 0 6

பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளின் சரித்திரமும் உபதேச மொழிகளும் ... 1 8

ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம் ... 0 1

ஸ்ரீ ரமண சத்குருமாலை ... 0 4

ஸ்ரீ ரமணதோத்திரம் ... 0 2

ஸ்ரீ ரமண நாற்பது (மூல சுலோகத்துடன்) ... 0 1

திரிசூலபுர (திருச்சுழி) மாகாத்மியம் (சாதா) ... 0 8

ஷை ... ... (அட்டை) ... 0 10

ஸ்ரீ நிரஞ்ஜனானந்தஸ்வாமி, ஸர்வாதிகாரி,

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை.